வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :-13 (2019) | இந்து சமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| *1. 4* | *11. 4* | *21. 2* | *31. 1* | *41. 4* |
| *2. 2* | *12. 3* | *22. 2* | *32. 1* | *42. 5* |
| *3. 4* | *13. 1* | *23. 3* | *33. 4* | *43. 5* |
| *4. 4* | *14. 3* | *24. 4* | *34. 3* | *44. 5* |
| *5. 5* | *15. 3* | *25. 3* | *35. 3* | *45. 4* |
| *6. 3* | *16. 2* | *26. 5* | *36. 5* | *46. 4* |
| *7. 5* | *17. 3* | *27. 2* | *37. 5* | *47. 2* |
| *8. 3* | *18. 3* | *28. 5* | *38. 4* | *48. 2* |
| *9. 3* | *19. 3* | *29. 4* | *39. 4* | *49. 3* |
| *10. 2* | *20. 4* | *30. 5* | *40. 1* | *50. 3* |

(50 x 1 = 50 புள்ளிகள்)

## பகுதி II
## பகுதி I

*1)*

1. வேதகாலச் சமயநிலை
   - இயற்கை வழிபாடு.
   - இயற்கை அம்சங்கள் நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றமை.
   - விண்ணுலக மண்ணுலக கிடையுலகத் தெய்வங்கள்.
   - வேதங்களில் கூறப்படும் யாக வழிபாடு.
   - வேதங்களில் பலநாமம் கூறி வழிபடுதல் உதாரணம் :- சதருத்திரியம்.
   - காயத்திரி, மந்திரி செபம், சூரிய வழிபாடு - இருக்கு வேதத்தில் காணப்படுகின்றது.
   - இசையால் இறைவனை வழிபடுதல் - சாமவேதம்.
   - மாந்திரிகத்தில் நம்பிக்கை – அதர்வ வேதம்
   - பண்டமாற்று வழிபாட்டு முறை. (5 புள்ளிகள்)

2. வேதம் கூறும் கடவுள் கோட்பாடு
   - இயற்கை சார்ந்த தெய்வீகக் கோட்பாடு கடவுட் கோட்பாட்டுவளர்ச்சி விண்ணுலக, மண்ணுலக இடையுலகத் தெய்வீக சிந்தனைகள் கடவுட் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை வளர்ச்சி.
   - பலநாமக் கடவுட் கோட்பாடு பின் சத்தியமான உள்பொருள் ஒன்றே என்னும் நம்பிக்கைகள் “ஏகம் சத்விப்ரா பகுதாவதந்தி” என்னும் கோட்பாடு பிரமம் பற்றிய சிந்தனைகள் இறைவனைக் கண்ணாற் காண முடியாத சிந்தனை.
   - பிரசாபதி, விஸ்விகர்மன், விஸ்வதேவா என்னும் கொள்கை பிற்கால பிரமம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையானவை.
   - கடவுளரின் மனித உருவேற்று வருணனைகள் அரசனைப் போல வைத்தியரைப் போல பெற்றோரைப் போல மக்களை பாதுகாக்கும் சக்திகளாக தெய்வங்களை வழிபடுதல்.
   - வேதங்கள் குறிப்பிடும் கடவுட் கோட்பாட்டின் பிற்கால வளர்ச்சிகள் யசூர்வேதம் உருத்திர சிவ கடவுட் கோட்பாடு பெறும் முக்கியத்துவம். (5 புள்ளிகள்)

agaram.lk

3. வழிபாட்டு முறைகளும் அவற்றின் பயன்களும்.

- யக்ஞம், யாகம், உபாசனை முறைகள் பிரதானமானவை. வேட்டல் அக்கினி வழிபாடு முக்கியத்துவம், எரியோம்பல், மந்திரங்களை உச்சரித்தல் அபிவிப் பொருள் வழங்கல் என்பவற்றுடன் தொடர்பை கருமகாண்டம், பிரமாணங்களில் வழிபாட்டு முறைகள் புரோகிதர் முக்கியத்துவம் வழிபாட்டு துறையில் புரோகிதர் செயற்பாடுகள்.
- யோசனைகளின் முக்கியத்துவம் "ஓம்" என்னும் பிரணவ உபாசனை : சதருத்திர உபாசனை காயத்திரி மந்திர உபாசனைகள் பிரதானமானவை, பக்தி பூர்வமான வழிபாடுகள், இல்லற வாழ்வு தொடர்பான சடங்குகள் சமஸ்காரங்கள், உபநயனம், அன்னப் பிரசாரனம், திருமணக் கிரியைகள் பிரதானமானவை.
- வழிபாட்டு முறைகளின் நோக்கம், செல்வம் நீண்ட ஆயுள், மக்கட்பேறு என்பவற்றையும் நாட்டு நலனையும் அடிப்படையாகக் கொண்டவை. *(5 புள்ளிகள்)*

4. வேதம் கூறும் தர்மமும் அவற்றின் சமூக நன்மைகளும்.

- வேதங்களே அனைத்து தர்மங்களுக்கும் மூலம் "(வேதா அகில தர்ம மூலம்)" வேதங்களில் சனாதன தர்ம வைதிக தர்மம் என்பவற்றின் அடிப்படைகளை காணமுடியும். நற்சிந்தனைகளும் நற்செயல்களும் வேத இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.
- யமசூக்தத்தில் தன்மையான வாழ்வின் அடிப்படைகள் கூறப்பட்டுள்ளன. இல்லறத் தர்மம், ஆச்சிராம தர்மம், புருஷதர்மம் ஸ்திரீ தர்மம் இராஜதர்மம் ஆகியன பிரதானமானவை குரு வழிபாடு குருவுக்கு கீழ்படிதல் குருசேவை ஆகியனவும் நற்தருமங்களாகும். வருணனுடைய ரிதம் "தர்மம் தலைகாக்கும்" என்னும் கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. இவற்றின் மூலம் சமூக ஒருமைப்பாடு வன்முறை இன்மை அன்பு பாராட்டுதல் பெரியோர் காட்டிய வழியில் நடத்தல் கடவுள் வழிபாடு ஆண், பெண் சமத்துவம் சமூக கட்டமைப்பு ஆத்மீக விடுதலை ஆத்மீக வாழ்வு என்பன ஏற்படும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. *(5 புள்ளிகள்)*

2)

1. வழிபட்ட தெய்வங்கள்

ஐவகை நிலங்களுக்குரிய தெய்வம்.

குறிஞ்சி : முருகன்.
முல்லை : மாயோன், திருமால்
மருதம் : வருணன்
நெய்தல் : இந்திரன்
பாலை : கொற்றவை

புற தெய்வங்கள் : சிவன், பார்வதி, புலராமன், சிவலிங்கம், வாசுதேவன், இலக்குமணன், கண்ணன், கதிரவன், காலன் *(5 புள்ளிகள்)*

2. கொற்றவை வழிபாடு

- இயற்கை நெறிக்காலத்தில் கொற்றவை வழிபாடு சிறப்புற்று இருந்தது. போரில் வெற்றி தரும் தெய்வமாக கொற்றவை வணங்கப் பெற்றோர். "போர்க்கொற்றவை".
- முருகன் கொற்றவையின் மகன் என்று கூறப்படுகின்றான். இது "கொள்ளுவை சிறு" என வருவதால் அறியலாம் கெற்றவை பாலை நிலத் தெய்வமாக வணங்கப்பட்டதாகவும், கொற்றவை அக்காலத்தில் "காடமர் செல்வி" என்ற பெயர்களினால் வணங்கப்பட்டார். பெண்கள் போருக்குப்போன தமது கணவன்மார் உயிருடன் திரும்பி வர வேண்டும் என்பதற்காக கொற்றவையை வழிபட்டனர். பிற்கால பெண் தெய்வ வழிபாட்டில் இவ் வழிபாடு துர்க்கை வழிப்பாடாக சிறப்புப் பெற்றது. *(5 புள்ளிகள்)*

3. வழிபாட்டு முறைகள்

புலி இடல், வெறியாட்டம், மலர் தூவுதல், குரவைக்கூத்து, வள்ளிக்கூத்து, நடுகல் வழிபாடு, பிராமணிய வழிபாடு, கிராமிய வழிபாடு, இயற்கை வழிபாடு, வேம்பு, அடம்பன், கொற்றவை, முன்னோர் வழிபாடு பேய், பிசாசு, நடுகல் போன்ற வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. *(5 புள்ளிகள்)*

agaram.lk

4. நம்பிக்கைகள்
   - இறைவன் ஒருவன் உளன்.
   - அவன் நம்மைக் காப்பவன்.
   - ஆடிப்பாடுவதன் மூலம் அவன் நம்மேல் உறைவான்.
   - மகப்பேற்றைத் தருபவன்
   - வெற்றியைத் தருபவன்
   - இறப்பு, பிறப்பின் நின்று எம்மைக் காப்பவன் (5 புள்ளிகள்)

3)

1. ஆகமங்கள் கூறும் பொருள் மரபு.
   ஆகமம் ஒவ்வொன்றும், சரியாபாதம், கிரியாபாதம், யோகா பாதம், ஞானா பாதம் என்ற நான்கு பாதங்களை கொண்டுள்ளது.
   - சரியா பாதம் : பிராயசித்த விதி, ஆலய அமைப்பு, சுற்று பிரகாரம், கோபுரம் சிவலிங்க இலக்கணம் உமாமகேஸ்வரன் இலக்கணம்.
   - கிரியா பாதம் : நித்திய, நைமித்திய, காமிய, உற்வசம் சிவசின்னம் அணியும் முறை.
   - யோக பாதம் : அட்டாங்க யோகம், அட்டமா சித்திகள் 6 வகை ஆதாரங்கள்.
   - ஞான பாதம் : முப்பொருள் உண்மை புவனங்களின் தோற்றம்.
   - கிரியைகள் : சமய அனுட்டானங்கள், அடியார், அந்தணர் ஒழுக்கம்,
     கட்டடி அமைப்பு : திருவுருவ அமைப்பு (விக்கிரகவியல்) சமய ஆசாரங்கள் சிற்பம், ஓவியம், நடனம் போன்ற கலை அம்சம் என்பன பற்றி கூறுகின்றது.
   - சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்கள்.
     மூல ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரை 28 ஆகும்.
     இது சிவபேதம் உருத்திர பேதம் என இரண்டு வகைப்படும் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன. (5 புள்ளிகள்)

2. சிறப்பியல்பு
   - இந்துசமயத்தின் முதன் நூல் வேதம் ஆகும்.
   - இவை இறைவனால் அருளப்பட்டவை
   - இந்து சமயத்தில் சிறப்புநூல் ஆகமம்.
   - சிரௌதம், தவதந்திரம் என சிறப்பிக்கப்படுகின்றது.
   - சைவாகமம், வைணவ ஆகமம், சாக்த ஆகமம் என ஒவ்வொரு சமய நெறிக்கும் ஆகமங்கள் உள்ளன.
   - சைவசித்தாந்தத்தின் கருவூலகமாகச் சிவ ஆகமங்கள் நிகழ்கின்றன.
   - இந்து தத்துவ கோட்பாட்டின் ஆப்த வாக்யை பிரமாணமாக அமைகிறது.
     உ – ம் : “வேதமோடாகமம் மெய்யாம் .......” (திருமந்திரம்)
   - கிரியை மரபுகளை நெறிப்படுத்தும் சிறப்பிற்குரியது ஆகமங்கள்.
   - இந்துக்களின் கட்டடசிற்ப கலை மரபுகளை எடுத்துக் கூறுகின்றது.
   - ஆலய வழிபாடு, சமய அனுட்டானம், சைவசித்தாந்த சிந்தனைகள் மூலம் மக்கள் வாழ்க்கையை சமயத்துடன் இணைந்துள்ளது. (5 புள்ளிகள்)

3. ஆகமம் கூறும் ஆலயக் கிரியை
   - அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
   - ஆகமம் கூறும் உருவ வழிபாட்டின் அடிப்படையில் “ஒரு நாமம் ஓர் உருவம்” ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தொற்குணம் கொட்டாமே” என்று மணிவாசகளின் வாக்கு அமைகிறது.
   - சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மைய்யமாகக் கொண்டவை. நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிய கிரியை பிரதானமானவை அவற்றுடன் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்ஷவம் பிராயசித்தம் முதலான கிரியைகளும் இடம் பெறுகின்றன.

agaram.lk

பூசை விதிகள், பூசை அம்சங்கள், மந்திர உற்சாடனம், நிவேதன பொருள் பற்றி கூறுகின்றன. (5 புள்ளிகள்)

4. திருவுருவழிபாடு.
   - அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றனர்.
     வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும், சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.
   - ஆலயம் அமைக்கும் இடம், உறுப்புகள் அளவைப் பிராமணர்கள், பிரதூரங்கள் தொடர்பாக (பிரகார இலட்சண விதிப்படலம் கூறுகின்றது)
   - 25 மூர்த்தி பேத அமைப்புப் பற்றி கூறுகின்றது.
   - திருவுருவுங்களை செதுக்குவதற்குரிய கற்களை தெரிவு செய்வதைப் பற்றி சிலாபரீட்சனம் என்ற தலைப்பில் கூறுகின்றது. திருவுருவ பங்க அமைதிகள், அங்கலட்சணம், அளவுப் பிரமானம், ஆடை ஆபரணம் பிரதிமாலட்சணத்தின் ஆகமப் பிரமாணம் என்பன சிறப்பிடம் பெறுகின்றது. (5 புள்ளிகள்)

## பகுதி II

4)

1. விசிட்டாத்துவதம் பற்றிய விளக்கம்.
   இராமானுஜர் ஈஸ்வரன் சித்து, ஜடம் ஆகிய மூன்றும் உண்மைப்பொருள் என்கின்றார். ஆயினும் மேலான பொருள் ஒன்று அது ஈஸ்வரன் (விசேடமானது)
   விசிட்டம் + அத்துவைதம் = விசிட்டாத்துவைதம் விசேடியத்திற்கும் விசேடனத்திற்கும் கிடையிலான நெருங்கிய தொடர்போ விசிட்டாத்துவைதம் என இராமனுஜர் என குறிப்பிடுகிறார். விச்சிட்டம் என்ற இறைவனோடு ஆன்மாக்கள் அத்வைதமாக கலந்துவிடும் மோட்சமே விசிட்டாத்துவைதம்.

2. அக்கோட்பாட்டின் சிறப்பம்சம்.
   உலகு உயிர் ஆகியவை பிரம்மத்திற்கு விசேடனங்கள் ஆகும். பிரம்மம் விசேடனங்களுக்கு விசேஷயம்.
   தத்துவக்கிரயக்கொள்கை அசித்சித் ஈஸ்வரன் மூன்றும் உண்மை.
   இறைவனுக்கும் உயிருக்கும் இடையிலான தொடர்பு சரீர சரீர சம்பந்தமாகும். உயிர்கள் இறைவனது உடலாகும். (அப்பிரசித்ரிக் கொள்கை)
   ஆன்மாக்கள் பல நித்தியமானவை இதுவும் அவரது கொள்கையின் சிறப்பம்சமாகும்.
   இறைவனின் குணம் இரு வகைப்படும். நிர்க்குணம், சருணம் ஐவகை இயல்பு பரம், வியூபம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் சகுண நிலையில் இறைவனுக்கு 6 குணங்கள் கூறப்படுகின்றது. ஞானம், சக்தி, புலம், ஐஸ்வரியம், வீரியம், தேஜஸ் என்பனவாகும்.

3. சங்கரர் கோட்பாட்டிலிருந்து அக்கோட்பாடு.
   வேறுபடும் விதம்
   - சங்கரர் பிரம்மம் உலகமாவதை மாயை கொண்டு விளங்குகின்றார்.
     காரணம் உண்மை – காரியம் பொய் என்ற விவர்த்த வாதம் மூலம் (இறைவன்) (உலகம்)
   - இராமானுஜர் பரிணாமவிதம் மூலம் விளக்குகிறார்.
     (முப்பொருளும் உண்மை)
   - சங்கரர் பிரமம் மட்டும் உண்மை – ஏனைய இரண்டும் பொய் என ஏகான்ம வாதம் மூலம் முன்வைத்த இராமானுஜர் மூன்று பொருளும் உண்மை ஆனால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது என்பதை பன்மை வாதம் அப்பிரசித்தி கொள்கை என்பன மூலம் முன்வைக்கின்றார்.
   - முத்திக் கொள்கையில் சங்கரர் ஞானத்திற்க்கும், இராமானுஜர் பிரபக்திக்கும் முக்கியம் கொடுத்துள்ளார். சங்கரர் முத்தி பற்றி தெளிவான கருத்தை முன்வைக்கவில்லை இராமானுஜர் உயிர்கள் பிறந்து இறந்து உழல்வதற்கு கன்மமே காரணம் பிறவித் துன்பத்திலிருந்து வழிபட்டு வைகுண்டத்தை அடைதலே வீடுபேறு என்று கூறுகின்றார் (6 புள்ளிகள்)

agaram.lk

4. ஆன்மீக நெறியை வளம்படுத்தும் வகை.
உயிர்கள் பிறந்து இறந்து உழல்வதற்கு கன்மமே காரணம்.
பிறவித்துன்பத்திலிருந்து விடுபட்டு வைகுண்டத்தை அடைவதே வீடுபேறாகும்.
முத்திக்கு கர்ம மார்க்கம், ஞான மார்க்கம், பக்தி மார்க்கம் } துணை செய்கின்றது எனக் கூறுகின்றார்.
பிரபக்தி அவசியம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
கடமையை செய் பலனை எதிர்பாராதே.
இறைவனை இடைவிடாது நினைக்க வேண்டும். இது துருவஸ்மிர்தி எனப்படும்.
இது கைவரப் பெறின் வீடுபேறு கிடைக்கும் என வலியுறுத்தியுள்ளார். *(4 புள்ளிகள்)*

5)

1. பிராமண நூல் : யோக சூத்திரம்
ஆசிரியர் : பதஞ்சலி முனிவர்
அட்டாங்க யோகத்தினை உதாரணத்துடன் தருக.

2. இமயம் : தீய செயல்களைத் தவிர்த்தல்.
நியமம் : ஒழுக்க விதிகளை கடைப்பிடித்தல்.
ஆசனம் : இருத்தல், உடலை தியானத்திற்காக வழியில் தயார்படுத்தல்.
பிரணாயமம் : மூச்சைப் பயிற்றுவிக்கும் பயிற்சி
பிரத்தியாகரம் : புலமைகக்கும்.
தாரணை : மனஅடக்கம், குறித்த விடயத்தில் மனதைப் பதித்தல்.
தியானம் : அச்சிந்தனையில் ஆழ்ந்து ஈடுபடுதல். *(10 புள்ளிகள்)*

3. கைவல்ய நிலைபற்றிய விளக்கம்.
   - கைவல்ய நிலையை அடையச்செய்யும் முறைகளில் ஒன்றையே யோகம் என சுட்டிக் காட்டப்படுகின்றது.
   - கைவல்ய நிலை என்பது கேவல நிலை என்னும் சொல்லில் இருந்து தோன்றியதாகும்.
   - கைவல்ய நிலை என்பது தனித்திருந்தவர் எனப் பொருள்படும்.
   - புருடன் தாம, குரோக, மோகம் என்னும் உணர்வுகளில் இருந்து விடுபட்டு தனித்திருக்கும் நிலையே கைவல்ய நிலை ஆகும்.
   - அட்டாங்க யோக நிலை விரிவடையும், சமாதி நிலையே கைவல்யம் என யோக சூத்திரம் கூறுகின்றது. *(6 புள்ளிகள்)*

agaram.lk

6)

1. பதியின் உண்மைத் தன்மை.
   - கடவுள் எனப்படுவது சைவசித்தார்த்தம் கூறும் பதியாகும். பதி உண்டு என்பதைச் சைவவசித்தார்ந்தம் பல வழிகளில் நிறுவுகின்றது.
   - அதாவது காட்சி, கருதல், உரை என்னும் முப்பிரமாணங்களின் வாயிலாகவும் கடவுள் உண்டு எனவும் விளக்கப்படுகின்றது.
   - மேலும் இவ்வுலகைப் படைத்தவன் ஒருவன் உள்ளான் என விளக்கப்படுகின்றது. ஒரு பானையைப் பார்க்கின்றபோது அதனை படைத்தவன் ஒருவன் உளன் என்பதை எவ்வாறு அறிகின்றோமோ அவ்வாறே இவ்வுலகையும் படைத்தவன் ஒருவன் உளன் என விளக்கப்படுகின்றது. இறைவனே இவ்வுலகை படைப்பதற்கு நிமித்த காரணமாக உளன் என்ற கருத்தும் கூறப்படுகின்றது.

     இன்னும் ஆன்மா தான் செய்த வினைகளில் சென்று சேராது, வினைகள் அவ்வவ் வான்மாக்களைச் சென்று சேராது அவ்வாறு சேர்பிக்க ஒருவன் வேண்டும். அவனே கடவுள் எனச் சைவசித்தார்ந்தம் விளக்குவதன் ஊடாக இறைவன் உண்டு. என்பதைச் சைவசித்தார்ந்தம் உண்மைப்படுத்துகின்றது.

     முதற் காரணம் : மாயை – மண்

     துணைக்காரணம் : அருட்சக்தி – கருவி
     நிமித்த காரணம் : இறைவன் - இறைவன்

புற உலகைக் கொண்டு இறை உண்மையை நிலை நிறுத்துகின்றது சைவசித்தாந்தம் குடை – அதன் பகுதிகள் பற்றிய எடுத்துகாட்டு உலக இயக்கத்திற்கு உதாரணமாகும். உலகின் தோற்றம் -பானையின் உற்பத்தில்.

உலகின் தொழிற்பாடு – குடையின் இயக்கம். இவ் உதாரணங்கள் மூலம் பதியின் உண்மைத்தன்மை நிறுவப்படுகின்றது. (5 புள்ளிகள்)

2. பசுவின் உண்மைத் தன்மை.
- சித்தாந்தம் காட்டும் ஆன்ம உண்மைத் தன்மையானது
- சிவஞான போத சூத்திரம் சான்றாகும்.
- எந்த ஒரு பொருள் எப்போது உண்டு / இல்லை என ஆராயப்படுகின்றதோ அப்போதே அது உண்மைப்பொருள் என கருதப்படுகிறது. ஆகவே சைவசித்தாந்திகள் ஆன்மாவின் உண்மைத் தன்மை பற்றி ஆராய முற்பட்டதில் இருந்து ஆன்மா உண்மைப் பொருள் என சைவசித்தாந்திகளால் பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. (5 புள்ளிகள்)

3. பசுவின் இயல்புகள்
- ஆன்மா உண்டு என்பதற்கான பிரமாணங்கள் இறைவன் உண்மைப்படுத்தப் படுகின்றது. என சைவசித்தாந்தம் கூறுகின்றது.
- முப்பொருளில் சதத்து, பசு என ஆன்மா அழைக்கப்படுகிறது.
- பசு பாசத்தோடு தொடர்புடையது எனவே உயிருக்கு பசு என்ற பெயர் சிறப்பாக உள்ளது.
- ஆன்மா அநாதியும், நித்தியமுமானது, எண்ணிக்கையற்றது, மும்மலங்களால் கட்டுண்டது, சார்ந்ததன், வண்ணம் காரணமாக 'சதசத்து' எனப்படுகிறது. (சிற்றறிவு, சுதந்திரமற்றது, ஆன்மா)
- பசுவின் மூன்று நிலைகள் : சகலர், பிரளயாகளர்', விஞ்ஞானகளர்.
- ஆன்மா அறியும் தன்மை உடையது, கன்ம வினைகள் மூலம் பிறவி எடுக்கும்.
- மூன்று அவஸ்தைகள் : சுத்தாவத்தை, சகலாவற்றை, கேவலாவத்தை.
- ஐந்து நிலைகள் : சாக்கிரம், சொப்பனம், சுளுத்தி, துரியம், துரியாதீகம்.

(5 புள்ளிகள்)

4. பசுவின் இலட்சியமும் அதனை அடைவதற்குரிய வழிகள்.
- இறைவனை அடைதல் சுவின் இலட்சியம் ஆகும்.
- படிமுறைகள் கூறப்படுகிறது. (இருவினைரும்பு, மலபரிபாகம், சக்தினிபாசம்).
- நல்வினை தீவினை இரண்டையும் சமமாக மதித்தல் வேண்டும்.
- இரண்டறக் கலத்தல் (தார் + தலை : தடவை) எனப்படும்.

வழிமுறைகள்
- சைவநாற்பாதம்.
- குருலிங்க சங்கம வழிபாடு
- விரதங்கள்
- ஒழுக்கலாறுகள்.
- திருமுறை ஓதுதல்.
- தலையாத்திரை
- சிவசின்னங்கள் அணிதல்.
- தீட்சை என்பனவாகும். (5 புள்ளிகள்)

7)

1. இந்து மருத்துவர்களின் பெயர்கள்

தேவ மருத்துவர் :- அஸ்வானி
குமாரவர்மன்
சுஸருதர்
ஆத்திரேயர்
தன்வந்தினி
சரகர்

agaram.lk

2. அதர்வன வேதத்தில் காணப்படும் ஔடதக் குறிப்புக்கள்
கி.முற்பட்ட காலத்தில் அதர்வன வேதத்தில் 2 ஆம் காண்டம் 66 ஆம் 67 ஆம் சூக்தங்களில் "கிருமி நாசம்" என்ற பகுதியில் நோய்கிருமிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
(5 புள்ளிகள்)
மனித உடற்கூற்றியல் குருதிச்சுற்றோட்டம் தொடர்பான துல்லியமான சில சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன.
உ – ம் : நாடியில் பாயும் சிவப்பு நிறகுருதி 'அருணா' எனப்படும்.
நாளம் தாங்கி வரும் கரும் சிவப்பு நிறக்குருதி லோஹினி என அழைக்கப்பட்டது.
ஔடதங்கள் பற்றிய சிறுகுறிப்புக்கள் காணப்படுகிறது.
குஷ்ட ரோகம் - இரஜனீ
கபாலம் - கர்ணசூலம்
விடிமுறிவு – துபஸ்கம்பம் (5 புள்ளிகள்)

3. இராமாயணத்தில் மூலிகைகள்.
கஞ்ச தேவர் சஞ்சீவி மலையை அடுத்து வந்தமை.
1. மருத் சஞ்சீவினி :- இறந்த வரை உயிர்ப்பித்தல்.
2. விசல்ய கரணி :- காயத்தின் வருமாறும்.
3. சந்தான காரணி :- எலும்பு முறிவு கிழிந்து போனகாயம் ஆறுதல்.
4. ஸ்வர்னிய கரண் :- தீக்காயம். (5 புள்ளிகள்)

4. இந்து வழிபாட்டில் மருத்துவ சிந்தனைகள்.
- பிள்ளையார் வழிகாட்டிய தோப்புக் கரணம் இடல், நெற்றியில் குட்டி வழிபடல்.
- அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என்பன மருத்துவத்துடன் தொடர்புடையவை.
- தலையாத்திரை :- கிரிவலம் வருதல் மூலம் (குருதிச் சுற்றோட்டம் சீராகும் தசை பலமடையும்) நீரிழிவு வாய்நோய் நீங்கும்.
- அறுகு, வில்வம் மருத்துவக் குணமுடைய பத்திரங்களாகும்.
- யோகாசனம் - தீராத நோய் தீர்க்கவல்லது.
- விரதம் - உடல், நலம் உண்டாகும். நோய் நீக்கும் தன்மையுடையது.
- சிவசின்னம் தளிர்தல் மூலம் நாடிநரம்புகளில் ஊடுருவிநோய் தீர்க்கும் தன்மை ஏற்படும்.
- குங்குமத்தில் உள்ள மஞ்சள் உடலில் விசபாதிப்பை நீக்கும் (5 புள்ளிகள்)

agaram.lk

8)

1. வாழ்க்கை வரலாறு
இவர் 1892 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 27ஆம் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மட்டுமாநகரின் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார்.
தந்தை : சாமித்தம்பி
தாய் ˙ கண்ணம்மை
இளமைப்பெயர் : மயில்வாகனம்
உபாத்தியார் : க.குஞ்சித்தம்பி, புலோலி பொ.வைத்தியலிங்க தேசிகர்.
தொழில் : விஞ்ஞான ஆசிரியர், அதிபர்.
கல்வி கற்ற பாடசாலை : கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலை மட்டக்களப்பு, புனிதமிக்கேல் கல்லூரி.
இவர் கடமையாற்றிய பாடசாலை : கல்முனை கத்தோலிக்க மிஷன், மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி.
தேர்ச்சி பெற்ற மொழி : தமிழ், ஆங்கிலம், கிரேக்கம், சமஸ்கிருதம்.
பிரமச்சாரிய நாமம் : பிரமோர சைந்தன்ஜர் 1924ம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் தீட்சா நாமம் பெற்றார். (5 புள்ளிகள்)

2. சமயப் பணி

- இலங்கையிலும் இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- சமயப் பிரசங்கம் செய்தல்.
- சமய சொற்பொழிவுகள் ஆற்றுதல்.
- சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதினை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலை நாட்டினார்.
- சமய தத்துவக் கருத்துக்களைச் சாதாரண மக்களும் விளங்கக்கூடியவாறு இலகு நடையில் விளக்கியவராவார்.
- சமயத்துறை சார்ந்தவராகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் கவிதைகளை வெளியிட்டார்.
- இராம கிருஷ்ண பரமஹ்சர், சுவாமி விபுலானந்தர் நாவலர் பெருமான் முதலான சமயம் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன் அவர்களுடைய போதனைகளையும் பணிகளையும் முன்மாதிரியாக கொண்டு சமயம் வளர பணி ஆற்றினார்.
- நவமணிமாலை, கணேச தோத்திர பஞ்சகம் கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார், இரட்டை மணிமாலை, சுப்பிரமணி சுவாமிகள். இரட்டை மணிமாலை, குமாரவேல் முதலான சைமய நூல்களை ஆக்கியுள்ளார். (5 புள்ளிகள்)

3. கல்விப் பணி

- விபுலானந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவர்.
- மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வகைகளைச் செய்தார்.
- கற்ற கல்வி பிறரைப் பாதிக்க கூடாது, எது உயிர்ப் பூட்டுவது, உண்மையாகக் காட்டுவது, தன்னம்பிக்கை உடையது எனும் கொள்கையை முன்வைத்தவர்.
- கல்வியற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்தில் பல பணிகளை மேற்கொண்டார்.
- 1925 இல் இலங்கை இராமகிருஸ்ண மிஷனரிப் பாடசாலைகளில் முகாமைப் பொறுப்பை ஏற்று தன் கல்விப் பணியை ஆற்றினார்.
- பல பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வியல் ஒளியூட்டினார்.
- ஆச்சிரமங்களை நிறுவி அநாதைச் சிறுவர்களுக்கு கல்விக்கு வழிவகுத்தார்.

(5 புள்ளிகள்)

agaram.lk

4. சமூகப் பணி

- விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளின் ஈடுபடுபவர்.
- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
- அன்னார் தன் சொந்த நலன்களை துறந்து வேளையிலும் நாட்டு நலனையும் மக்கள் நலனையும் துறவாதிருந்த சிறப்பிற்குரியவர் ஆவார்.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத்திட்டங்களை ஏற்படுத்தினார்.
- விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும் அநாதைக் குழந்தைகளினதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப்பணிகள் ஆகும். (5 புள்ளிகள்)